# ஒன்றிணைந்து, முன்னோக்கிய நமது புதிய பாதையை உருவாக்குதல்



BUDGET
2022

# முன்னுரை

அன்பார்ந்த சக சிங்கப்பூரர்களே,

கடந்த ஈராண்டுகளாக, கொவிட்-19 பரவலால் ஏற்பட்ட சவால்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். சிங்கப்பூரர்கள் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றிணைந்து செயல்பட்டார்கள். இந்தக் கிருமி முதன்முதலில் தலையெடுத்தபோது இருந்ததைவிட, இப்போது நாம் அதிக வலுவுடன் இருக்கிறோம்.

உதவி தேவைப்படும் ஊழியர்கள், தொழில்கள், குடும்பங்கள் ஆகியோருக்குத் தொடர்ந்து உதவி செய்கிறோம். உடனடியான சவால்களுக்கு அப்பால், எதிர்காலத்தையும் நாம் கருத்தில் கொண்டு, எதிர்கால சவால்களுக்கும், வாய்ப்புகளுக்கும் நம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

நமது மக்களும், தொழில்நிறுவனங்களும் வளர்ச்சி அடைய நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம். தொழில்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ளவும், ஊழியர்களுக்குப் புதிய ஆற்றல்களில் பயிற்சி அளிக்கவும், பசுமைப் பொருளியலின் புதிய வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் நான் ஊக்கமளிக்கிறேன்.

நமது சமூக இணக்கத்தை நாங்கள் தொடர்ந்து புதுப்பித்து வலுப்படுத்துவோம். நமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காகவும், குறைந்த வருமான ஊழியர்களின் முன்னேற்றத்திற்காகவும் நம் பிள்ளைகளில் முதலீடு செய்வோம். ஓய்வுக்காலத் தேவை நிறைவை மேம்படுத்துவோம். எதிர்கால சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்குத் தயார்ப்படுத்துவோம். இவை அனைத்தும் மேன்மேலும் அக்கறையுடன், அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்தை உருவாக்குவதற்கு நமக்குத் துணை புரியும்.

அதிகரித்துவரும் செலவினத் தேவைகளுக்கு ஆதரவளிக்க, மேலும் நியாயமான, மீள்திறன்மிக்க வரிக் கட்டமைப்பை நாங்கள் உருவாக்குகிறோம். இதில் அனைவரும் பங்களிப்பார்கள் என்றாலும், அதிக வசதியுள்ளவர்கள் அதிகமாகப் பங்களிப்பார்கள். வரிவிதிப்பு முறையும் வருமான இடமாற்றமும் அதிக நியாயமாகவும் முற்போக்காகவும் இருப்பதை நாங்கள் உறுதிப்படுத்த இது வழிகோலும்.

ஒன்றிணைந்து நமது புதிய பாதையை உருவாக்குகிறோம் — ஒன்றிணைந்து கிருமிப்பரவலைக் கடந்து சென்று, எதிர்காலத்திற்காக மேம்பட்ட சிங்கப்பூரை உருவாக்குவோம்.

**லாரன்ஸ் வோங்**
நிதி அமைச்சர்



# ஒன்றுசேர்
# முன்னே
# செ

## உள்ளடக்கம்


**புதிய ஆற்றல்களில் முதலீடு**

- தொழில்களுக்கு ஆதரவு

பக்கம் 6 - 7

- நம் மக்கள்மீது முதலீடு

பக்கம் 8 - 9

**நமது சமூக இணக்கம் புதுப்பிக்கப்பட்டு, வலுவாக்கப்படும்**

- பொருள், சேவை வரி ஆதரவு

பக்கம் 11 - 12

- குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் ஆதரவு

பக்கம் 13 - 15




BUDGET 2022

# ந்து
# னறிச்
# சல்வோம்


**நமது பசுமை நிலைமாற்றம் ஈடேறும்**

▶ சிங்கப்பூர்ப் பசுமைத் திட்டம்

பக்கம் 17

▶ கரியமில வாயு வரி

பக்கம் 18

**மேலும் நியாயமான, மீள்திறன்மிக்க வரிக் கட்டமைப்பை உருவாக்குதல்**

பக்கம் 20 - 22

பொருளியல்

# புதிய ஆற்றல்களில் முதலீடு



# தொழில்களுக்கு ஆதரவு

**தொழில்களுக்கு உடனடி ஆதரவு**

- **$500 மில்லியன் மதிப்புள்ள வேலை, தொழில் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**
  - புதிய **சிறுதொழில் மீட்சி மானியம்**
    - கொவிட்-19 கட்டுப்பாடுகளால் ஆக அதிக பாதிப்படைந்த துறைகளில் உள்ள சிறிய, நடுத்தர நிறுவனங்கள் ஒவ்வோர் உள்ளூர் ஊழியருக்கும் **$1,000** வழங்குதொகை பெறுவார்கள் (ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அதிகபட்சம் $10,000)
    - உள்ளூர் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தாத, தகுதிபெறும் துறைகளில் உள்ள ஏக உரிமையாளர்கள், பங்காளித்துவங்கள், சிங்கப்பூர் உணவு அமைப்பின் உரிமம் பெற்ற உணவங்காடிக்காரர்கள், சந்தை மற்றும் காப்பிக் கடைக்காரர்கள் **$1,000** வழங்குதொகை பெறுவார்கள்
  - வேலை கிடைப்பது அதிக சிரமமாக இருக்கும் ஊழியர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள ஊக்குவிப்பாக, **வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டம்** 2022 செப்டம்பர் வரை நீட்டிக்கப்படுகிறது
- **தற்காலிக இணைப்புக் கடன் திட்டம், தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம் EFS – வர்த்தகக்** கடன் ஆகியவை, திருத்தப்பட்ட வரம்புகளுடன் 30 செப்டம்பர் 2022 வரை நீட்டிக்கப்படுகின்றன
- உள்நாட்டுக் கட்டுமானத் திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்க, **EFS – திட்டப்பணி கடன்** திட்டம் 31 மார்ச் 2023 வரை நீட்டிக்கப்படுகிறது
- மூல ஆற்றல்களைப் பாதுகாக்கவும், அனைத்துலக விமானத்துறை மையம் என்ற தகுதியை மேம்படுத்தவும் **விமானப் போக்குவரத்துத் துறைக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**

பொருளியல்

**மின்னிலக்கமயமும் புத்தாக்கமும்**

- **மின்னிலக்க ஆற்றல்களை வளர்ப்பதற்குக்** கூடுதலாக $200 மில்லியன்
- பலதுறைத் தொழில்கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்விக்கழகங்களிலும் **தொழில்நுட்ப, புத்தாக்க, தொழில்நிறுவன** நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையங்களின் கொள்ளளவு அடுத்த 5 ஆண்டுகளில் அதிகரிக்கப்படும்

**உள்ளூர் தொழில்நிறுவனங்களை வலுப்படுத்துதல்**

- **உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியத்தை (PSG)** விரிவுபடுத்தி, அடுத்த 4 ஆண்டுகளில் 100,000-க்கும் மேற்பட்ட PSG திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்க $600 மில்லியன் ஒதுக்கீடு
- புதிய **சிங்கப்பூர் அனைத்துலகத் தொழில்நிறுவனத் திட்டம்,** பெரிய உள்நாட்டுத் தொழில்நிறுவனங்கள் புத்தாக்கத்தில் ஈடுபடவும், அனைத்துலகமயமாகவும் ஆதரவளிக்கும்
- புதிய **சிங்கப்பூர் அனைத்துலக நிர்வாகத் திறனாளர் திட்டம்,** சிங்கப்பூர் அனைத்துலகத் தொழில்நிறுவனங்களில் சேர அதிகமான இளம் திறனாளர்களை ஈர்க்கும்

**தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம்**

- மேம்படுத்தப்பட்ட **இணைப்புகள் மற்றும் பற்றுமானங்கள் (M&A)** கடன் திட்டத்தில் 1 ஏப்ரல் 2022 முதல் 31 மார்ச் 2026 வரை உள்நாட்டு M&A நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படும்
- மேம்படுத்தப்பட்ட **வர்த்தகக் கடன்** திட்டத்தின்கீழ், தொடக்கநிலைச் சந்தைகளில் வர்த்தகம் செய்யும் தொழில்நிறுவனங்களுக்கான 70% இடர் பகிர்வு 30 செப்டம்பர் 2022 தேதிக்குப் பிறகும் நிலைநாட்டப்படும்

# நம் மக்கள்மீது முதலீடு

**நம் மக்கள்மீது முதலீடு**

- **தொழில்நிறுவனங்களுக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி (SFEC),** தகுதிபெறும் செலவுகளில் 90% வரை ஈடுசெய்யும். எடுத்துக்காட்டாக, வேலை மறுவடிவமைப்பு, பயிற்சித் திட்டங்கள்
  - **திறன் மேம்பாட்டுத் தீர்வை பங்களிப்பைத் தள்ளுபடி** செய்வதன்வழி கூடுதலாக 40,000 சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கு SFEC விரிவு செய்யப்படுகிறது

**மேம்பட்ட திறன் இணைப்பு**

- தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் (என்டியுசி) **நிறுவனப் பயிற்சிக் குழுக்களை** விரிவுபடுத்தவும், நிறுவனங்களின் உருமாற்றத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் **புதிய மானியத்தை** அறிமுகப்படுத்தவும் $100 மில்லியன் ஒதுக்கீடு



பொருளியல்

**பணியிடைக்கால ஊழியர்களுக்கு ஆதரவு**

- **எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் – நிறுவன இணைப்புத் திட்டம்,** முழுநேர இணைப்புகளோடும் பயிற்சிப் படித்தொகைகளோடும் நிரந்தரமாக்கப்படுகிறது
- புதிய **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணி நிலைமாற்றத் திட்டம்,** வேலை தேடுவோருக்கு உயர்தரமான, தொழில்துறை சார்ந்த பயிற்சி வகுப்புகளை வழங்கும்

**வெளிநாட்டு ஊழியர் கொள்கைகளில் மாற்றங்கள்**

- வேலை அனுமதி அட்டையில் மாற்றங்கள்
  - தகுதிபெறும் குறைந்தபட்ச சம்பளம் **$5,000** ஆக அதிகரிப்பு; நிதிச் சேவை துறைக்கு $5,500
  - புதிய விண்ணப்பங்களுக்கு 2022 செப்டம்பர் மாதத்திலிருந்து, புதுப்பிப்பு விண்ணப்பங்களுக்கு 2023 செப்டம்பர் மாதத்திலிருந்து
- சிறப்பு வேலை அனுமதி அட்டையில் மாற்றங்கள்
  - தகுதிபெறும் குறைந்தபட்ச சம்பளம் **$3,000** ஆக அதிகரிப்பு; நிதிச் சேவை துறைக்கு $3,500
  - புதிய விண்ணப்பங்களுக்கு 2022 செப்டம்பர் மாதத்திலிருந்து, புதுப்பிப்பு விண்ணப்பங்களுக்கு 2023 செப்டம்பர் மாதத்திலிருந்து
  - படிநிலை 1 தீர்வை 2025-ல் $650 ஆக உயர்த்தப்படும்
- கட்டுமான, செயல்முறை துறைகளுக்கான வேலை அனுமதிச்சீட்டு கொள்கைகளில் மாற்றங்கள்
  - **சார்ந்திருப்போர் விகித வரம்பு** 1 ஜனவரி 2024 முதல் 1:7 வரம்பிலிருந்து **1:5** வரம்புக்குக் குறைக்கப்படும்
  - 1 ஜனவரி 2024 முதல் புதிய **தீர்வை கட்டமைப்பு**

# நமது சமூக இணக்கம் புதுப்பிக்கப்பட்டு, வலுவாக்கப்படும்



சமூகம்



# பொருள், சேவை வரி ஆதரவு

**$6.6 பில்லியன் மதிப்புள்ள மேம்படுத்தப்பட்ட உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்**

- வளர்ந்த சிங்கப்பூரர்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் **$700 முதல் $1,600 வரை ரொக்க வழங்குதொகைகள்**
- 55 வயதுக்கு மேற்பட்ட தகுதிபெறும் மூத்தோருக்கு அடுத்த 3 ஆண்டுகளில் **$600 முதல் $900 வரை பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு (GSTV) – ரொக்கம் (மூத்தோருக்கான போனஸ்)**
- வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் குடும்பங்களுக்கு அடுத்த 4 ஆண்டுகளில் **$330 முதல் $570 வரை GSTV – யு-சேவ் கழிவுகள்**
- 20 வயதுக்குக் குறைவான சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கும் 55 வயதுக்கு மேற்பட்ட மூத்தோருக்கும் அடுத்த 3 ஆண்டுகளில் **$450 மெடிசேவ்** நிரப்புத்தொகை
- சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் **$400 சமூக மேம்பாட்டு மன்றப் (CDC) பற்றுச்சீட்டுகள்**

**மேம்படுத்தப்பட்ட பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுத் திட்டம் (GSTV)**

- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள்** (புதிய உட்கூறு)
- GSTV – ரொக்கம் பெறுவதற்கான **மதிப்பீட்டுக்குரிய வருமான** வரம்பு $28,000-லிருந்து **$34,000** ஆக அதிகரித்து, மேலும் பல சிங்கப்பூரர்களுக்குப் பலனளிக்கும்
- **GSTV – ரொக்க வழங்குதொகைகள்** அதிகரிப்பு:

| வீட்டின் ஆண்டு மதிப்பு | GSTV – ரொக்க வழங்குதொகை |
|---|---|
| $13,000 மற்றும் அதற்கும் குறைவு | **$500** ($300-லிருந்து அதிகரிப்பு) |
| $13,001 முதல் $21,000 | **$250** ($150-லிருந்து அதிகரிப்பு) |

சமூகம்

# குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் ஆதரவு

**குடும்பங்களுக்கான உடனடி ஆதரவு**

- **$560 மில்லியன் மதிப்புள்ள குடும்பங்களுக்கான ஆதரவுத் தொகுப்புத்திட்டம்**
    - 2022-ன் எஞ்சியுள்ள காலாண்டுகளில் இருமடங்கு **GSTV – யு-சேவ் கழிவுகள்** (வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் குடும்பங்களுக்குக் கூடுதலாக **$285** வரை கிடைக்கும்)
    - 20 வயதுக்குக் குறைவான பிள்ளைகளின் பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு, எடுசேவ் கணக்கு, உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு ஆகியவற்றில் **$200** நிரப்புத்தொகை
    - அனைத்து சிங்கப்பூர் குடும்பங்களுக்கும் 2022-ல் **$100 சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்**

**ஓய்வுக்காலத் தேவை நிறைவுக்கு ஆதரவு**

- 55 முதல் 70 வயதுடைய மூத்த ஊழியர்களின் **மத்திய சேம நிதி சந்தா விகிதங்களின்** அடுத்த அதிகரிப்பு 2023-ல் தொடர்ந்து நடப்புக்கு வரும் (**மத்திய சேம நிதி சந்தா தொகை அதிகரிப்பிற்கான கழிவு** உள்ளடங்கும்)
- 2023 முதல் 2027 வரை 55 வயதை அடைவோருக்கான **அடிப்படைத் தொகை** உயர்த்தப்படும்

**நம் பிள்ளைகளில் முதலீடு செய்தல்**

- வாடகை வீட்டில் பிள்ளைகளுடன் வசிக்கும் குடும்பங்கள் இரண்டாம் முறையாளராக வீடு வாங்குவதற்கு மேம்பட்ட ஆதரவளிக்க, **புதுத்தொடக்க வீட்டுத் திட்டம்** மேம்படுத்தப்படும்
- **கிட்ஸ்டார்ட் திட்டம்** நாடெங்கிலும் விரிவுபடுத்தப்படும்
- வசதிவாய்ப்பற்ற குடும்பங்களைச் சேர்ந்த இன்னும் பல மாணவர்களுக்கு ஆதரவளிக்க, நாடளாவிய **அப்லிஃப்ட் சமூகக் கட்டமைப்பு** விரிவுபடுத்தப்படும்
- வாடகை வீட்டில் பிள்ளைகளுடன் வசிக்கும் இன்னும் பல குடும்பங்களுக்கு ஆதரவளிக்க, **சமூக இணைப்பின்** விரிவாக்கத்துடன் சமூகச் சேவை வழங்கீடு ஒருங்கிணைக்கப்படும்

**எதிர்கால சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்குத் தயார்ப்படுத்தும் முனைப்பு**

- ஆரோக்கியமான எஸ்ஜி – சமூகத்திற்கு எளிதில் கிடைக்கும் வகையில் சுகாதாரப் பராமரிப்பு அவர்களுக்கு அருகில் கொண்டு செல்லப்படும்
- சுகாதாரப் பராமரிப்புக் குழுமங்களுக்கும் சமூகப் பங்காளிகளுக்கும் இடையில் மேலும் அணுக்கமான பங்காளித்துவங்கள் அமைக்கப்படும்
- மனநலச் சேவைகளும் சமூக சேவைகளும் மேம்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்

**அக்கறையான, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயம்**

- இயலாமைகள் உள்ளவர்களுக்கு வேலை, வாழ்நாள் கற்றல், ஓய்வுநேரப் பராமரிப்பு போன்றவற்றில் வலுவான ஆதரவு வழங்க, **துணை புரியும் பெருந்திட்டம் 2030** தொடங்கப்படும்
- தகுதிபெறும் நன்கொடைகளுக்கு இணைத்தொகை வழங்க, நிதியாண்டு 2024 கடைசி வரை **மேம்படுத்தப்பட்ட நிதி திரட்டும் திட்டத்திற்கு** $100 மில்லியன் நிரப்புத்தொகை
- அறநிறுவனங்கள் சமூகத்திற்காக மேலும் அதிகமாகச் செய்வதற்கு உதவியாக, **அறநிறுவனங்கள் ஆற்றல் நிதிக்கு** $26 மில்லியன் நிரப்புத்தொகை
- உயர் செயல்திறன்மிக்க விளையாட்டுகளுக்குக் கிடைக்கும் நன்கொடைகளுக்கு இணைத்தொகை வழங்க, **ஒன் டீம் சிங்கப்பூர் நிதி** 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது
- கலைகள், மரபுடைமை அறநிறுவனங்களுக்குக் கிடைக்கும் நன்கொடைகளுக்கு இணைத்தொகை வழங்க, **கலாசார இணை நிதிக்கு** 3 ஆண்டுகளில் $150 மில்லியன் நிரப்புத்தொகை



சமூகம்

**குறைந்த வருமான ஊழியர்களுக்கு உதவி**

- சில்லறை விற்பனை, உணவுச் சேவைகள், கழிவு நிர்வாகத் துறைகளுக்கும், துப்புரவாளர்கள், நிர்வாகிகள், ஓட்டுநர்கள் போன்ற வேலைகளைச் செய்வோருக்கும் **படிப்படியான சம்பள உயர்வு முறை** நீட்டிக்கப்படும்
- வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு வைத்திருக்கும் நிறுவனங்கள், உள்ளூர் ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் **தகுதிபெறும் உள்ளூர்ச் சம்பளம்** தரவேண்டும். தற்போதைய தகுதிபெறும் மாதாந்தர உள்ளூர்ச் சம்பளம் $1,400
- **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டத்தின்கீழ்** 2022 முதல் 2026 வரை குறைந்த வருமான ஊழியர்களின் சம்பள உயர்வுகளுக்கு இணை நிதி வழங்கப்படும்

| ஆண்டு | வருமான உயர்வு |
|---|---|
| 2022 - 2023 | 50% |
| 2024 - 2025 | 30% |
| 2026 | 15% |

- குறைந்த வருமான ஊழியர்களின் வருமானத்தைப் பெருக்க **வேலைநலன் துணை வருமானத் திட்டம்** மேம்படுத்தப்படும்
  - தகுதிபெறும் வருமான வரம்பு மாதத்திற்கு $2,500 ஆக உயர்த்தப்படும்போது, அதிகமான ஊழியர்கள் பயனடைவார்கள்
  - 30 முதல் 34 வயதுடைய ஊழியர்களுக்கு நீட்டிக்கப்படும்
  - புதிய குறைந்தபட்ச வருமானம்: **$500**
  - அதிகபட்ச வருடாந்தர வழங்குதொகைகள் **$2,100 முதல் $4,200** வரை அதிகரிப்பு

# நமது பசுமை நிலைமாற்றம் ஈடேறும்



# நீடித்த நிலைத்தன்மை



## நமது பசுமை நிலைமாற்றம் ஈடேறும்

**கரியமில வாயுவற்ற நிகர நிலையை அடையும் இலட்சியம்**

- **கரியமில வாயுவற்ற நிகர நிலையை நூற்றாண்டின் மத்திக்குள் அல்லது ஏறக்குறைய அந்தக் காலகட்டத்தில்** அடையும் வகையில் சிங்கப்பூரின் இலட்சியம் உயர்த்தப்படும்

**சிங்கப்பூர்ப் பசுமைத் திட்டம்**

- பசுமை வளர்ச்சி வாய்ப்புகளும் வேலைகளும். எடுத்துக்காட்டாக, பசுமை நிதியளிப்பு, **கரியமில வாயு** சேவைகள்
- **பொதுத் துறை பசுமைப் பத்திரங்களின் வெளியீடு** 2030-ஆம் ஆண்டுக்குள் $35 பில்லியனுக்கு அதிகரிக்கப்படும்; சிங்கப்பூர்ப் பசுமைப் பத்திரங்கள் கட்டமைப்பு 2022-ஆம் ஆண்டுக்குள் வெளியிடப்படும்
- மின்சார வாகனங்களின் பயன்பாட்டைத் துரிதப்படுத்த, வீடுகளுக்கு அருகில் அதிகமான மின்னேற்ற மையங்கள் அமைக்கப்படும்

**கரியமில வாயு வரி**

- கரியமில வாயு வரி விகித மாற்றங்கள்:

| ஆண்டு | விகிதம் (ஒரு டன்) |
|---|---|
| தற்போது | $5 |
| 2024 - 2025 | $25 |
| 2026 - 2027 | $45 |
| 2030-க்குள் | $50 முதல் $80 |

- கரியமில வாயு வரி செலுத்தவேண்டிய தொழில்கள் 2024 முதல் வரிவிதிப்புக்குரிய வெளியாக்கத்தில் **அதிகபட்சம் 5% வரை** ஈடுசெய்ய கரியமில வாயு கிரடிட் பயன்படுத்த அனுமதிக்கப்படும்
- வெளியாக்கம் அதிகமுள்ள, வர்த்தகப் பாதிப்புள்ள துறைகளின் குறுகியகாலத் தொழில் போட்டித்தன்மை பாதிப்புக்கு உதவி புரிய நிலைமாற்றக் கட்டமைப்புத் திட்டம்
- குடும்பங்களுக்கான ஆதரவு பற்றிய மேல்விவரங்கள் அடுத்த ஆண்டு அறிவிக்கப்படும். எடுத்துக்காட்டாக, கூடுதல் யு-சேவ் கழிவுகள்

வரி

# மேலும் நியாயமான, மீள்திறன்மிக்க வரிக் கட்டமைப்பை உருவாக்குதல்



# மேலும் நியாயமான, மீள்திறன்மிக்க வரிக் கட்டமைப்பை உருவாக்குதல்

**நிறுவன வருமான வரி**

- அடிப்படைத் தேய்மானம் மற்றும் இலாப மாற்ற (BEPS) உத்திமுறை 2.0 அடிப்படையிலான உலகளாவிய குறைந்தபட்ச வரி விகிதத்திற்கு ஏற்ப, **பலனளிக்கும் குறைந்தபட்ச வரி விகிதம் (METR)** என்றழைக்கப்படும் நிரப்பல் வரி ஆராயப்படும்
- சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் METR வரியின் வடிவமைப்பு குறித்து தொழில்துறையைக் கலந்தாலோசிக்கும்

**தனிநபர் வருமான வரி**

- மதிப்பீட்டு ஆண்டு 2024 முதல் உச்ச வரி விகிதம் அதிகரிக்கும்:

| வரி விதிப்புக்குரிய வருமானம் | வரி விகிதம் |
|---|---|
| $500,000-க்குமேல் முதல் $1 மில்லியன் வரை | **23%** (22%-லிருந்து அதிகரிப்பு) |
| $1 மில்லியனுக்கு மேல் | **24%** (22%-லிருந்து அதிகரிப்பு) |

**சொத்து வரி**

- வரி விகிதங்கள் 2023 முதல் இரண்டு கட்டங்களாக அதிகரிக்கும். 2024-ல் நடப்புக்கு வரும் வரி விகிதங்கள்:
  - **உரிமையாளர் குடியிருக்காத** வீடுகளுக்கு: **12%-36%** (தற்போதைய 10%-20% விகிதத்திலிருந்து அதிகரிப்பு)
  - **உரிமையாளர் குடியிருக்கும்** வீடுகளின் ஆண்டு மதிப்பில் $30,000-க்கு மேற்பட்ட மதிப்புக்கு: **6%-32%** (தற்போதைய 4%-16% விகிதத்திலிருந்து அதிகரிப்பு)

**கூடுதல் பதிவுக் கட்டணம் (ARF)**

- சொகுசு கார்களுக்கு உயர் ARF விகிதங்கள்
- பொதுச் சந்தை மதிப்பில் $80,000-க்கு மேற்பட்ட தொகைக்கு **220%** விகிதத்தில் கூடுதல் ARF பிரிவு

| பொதுச் சந்தை மதிப்பு | ARF விகிதம் |
|---|---|
| முதல் $20,000 | 100% |
| அடுத்த $30,000 | 140% |
| அடுத்த $30,000 | 180% |
| **$80,000-க்கு மேல்** | **220%** |

## பொருள், சேவை வரி (GST)

- பொருள், சேவை வரி உயர்வு 2023 வரை ஒத்தி வைக்கப்பட்டு, இரு கட்டங்களாக அமலாக்கப்படும்

| காலகட்டம் | GST விகிதம் |
|---|---|
| 1 ஜனவரி 2023 முதல் | 8% |
| 1 ஜனவரி 2024 முதல் | 9% |

- பொருள், சேவை வரி உயர்வின் பாதிப்பைத் தணிக்க:
    - சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் $6.6 பில்லியன் மதிப்புள்ள மேம்படுத்தப்பட்ட **உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்** (பக்கம் 11)
    - குறைந்த வருமானம் முதல் நடுத்தர வருமானம் வரை ஈட்டும் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிரந்தர **GSTV திட்டம்** (பக்கம் 12)
    - அரசாங்கக் கட்டணங்கள் 1 ஜனவரி 2023 முதல் 1 ஆண்டுக்கு அதிகரிக்காது
    - பொது நிதி உதவி பெறும் சுகாதாரப் பராமரிப்பு, கல்வி சேவைகளின் பொருள், சேவை வரியை அரசாங்கம் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும்
    - சேவை, பராமரிப்புக் கட்டணங்களுக்குச் செலுத்தப்படவேண்டிய கூடுதல் பொருள் சேவை வரியை நகர மன்றங்கள் ஏற்றுக்கொள்ள ஆண்டுக்குக் கூடுதலாக $15 மில்லியன் ஒதுக்கீடு
    - தொழில்கள் கணக்கியல் மற்றும் விற்பனை முறை தீர்வுகளுக்கு நிதி உதவிக்கு விண்ணப்பம் செய்ய **உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம்** (பக்கம் 7)

MOF

MINISTRY OF FINANCE

SINGAPORE

singaporebudget.gov.sg இணையப்பக்கத்தில் மேல்விவரங்களைப் படித்தறியலாம்

18 பிப்ரவரி 2022 நிலவிய தகவலின் அடிப்படையில்